RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt1933

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்




# சீறாப்புராணத்தில் உறுதிப்பொருள்

**ப.நிர்மலாதேவி** [அ,*]

[அ] முதுகலை தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை 625 021, தமிழ்நாடு, இந்தியா.

# Uruthiporul in Seera puranam

**P. Nirmaladevi** [a,*]

[a] Department of Tamil, Madurai Kamaraj University, Madurai 625 021, Tamil Nadu, India

Received : 13-04-2019
Accepted : 11-05-2019

**ABSTRACT**

It is mentioned that the epics should contain the four objectives worthy of human pursuit, namely, 'aRam' (ethics), 'poruL' (economy), 'inpam' (joy) and 'viiDu' (heaven). These four objectives are mentioned as 'purusharthams' in Sanskrit. Dharma, artha, kaama and moksha are the equivalents for aRam, poruL, inpam and viiDu. However, the concept of moksha is not found anywhere in the Sangam literature. It came into existence by the influence of Sanskrit and the literary writings of the northern writers. Raj Gowthaman is of the opinion that the 'trivarkkam' of the north tradition is called aRam, poruL and inpam in Tamil and the left out 'moksha' in 'chaturvitha purushartham', i.e., the four objectives of human pursuit did not exist as 'viiDu' during Sangam period. It could be said even clearly the concept of northern tradition based 'moksha' was not there with religious connotation in the Sangam society. Rebirth, heaven, elite, heavenly immortal, world of the dead, world of deities-all are included in the poet's poetic tradition'. Including the objectives of human pursuits in epics, a rule was set in the grammar. 'Seera puranam' talks about the first three objective of human pursuit. Except in Buddhism and Jainism, the concept of heaven could be found in all the religions. It is discussed in Vedic religions. Islam refers heaven as 'the world of the dead'. Seera puranam mentions, however, all the four objectives.

**Keywords:** Ethics, Joy, Heaven, Economy

## முன்னுரை

பேரிலக்கியங்கள் யாவும் அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் நான்கு உறுதிப்பொருள்களையும் கொண்டு அமைவது இன்றியமையாதது எனக் குறிப்பிடப்படுகிறது. உறுதிப்பொருள் என்பதற்கு வடமொழியில் புருஷார்த்தங்கள் என்று குறிப்பர். அறம், பொருள்,

இன்பம், வீடு என்பதனை, தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்று கூறுவர். தமிழ் மரபில் மோட்சம் என்பது சங்க இலக்கியத்தில் காணப்படாதவொன்று. வீடுபேறு என்பதும் வடமொழியின் தாக்கத்தினாலும் வடவர்களின் இலக்கிய ஆக்கத்தினாலும் இங்கு தோன்றியதாகும். “வடமரபின் திரிவர்க்கம் தமிழில் அறம், பொருள், இன்பம் என்று வழங்குவதோடு சதுர்வித புருஷார்த்தம் என்ற நால்வகை உறுதிப் பொருட்களில் எஞ்சிய மோட்சம் என்பது சங்க காலத்தில் வீடு எனப் பெயர்த்து வழங்கப்படவில்லை. அது சங்கம் மருவிய காலத்தில் வழங்கியது. ஏனெனில் வடமரபின் மோட்சத்துக்கு இணையான சமய வகைப்பட்ட கருத்தாக்கம் சங்க காலச் சமூகத்தில் இல்லையென்றே கூறிவிடலாம். மறுமை, துறக்கம், உயர்ந்தோர், தேவர், புத்தேள், உம்பர் உலகம் என்று புலவர் மரபு கூறியது”1 என உறுதிப் பொருட்கள் தமிழகத்தில் வழங்கப்படுவது பற்றிக் கருத்துரைக்கிறார் ராஜ்கௌதமன். இவ்வுறுதிப் பொருட்கள் காப்பியங்களில் இருப்பது இலக்கண விதியாகக் கூறப்படுகிறது. சீறாப்புராணத்தில் அறம், பொருள், இன்பம் சார்ந்த செய்திகள் காணப்படுகின்றன. மோட்சம் என்பது அனைத்து சமயங்களிலும் காணப்படும் ஒன்றாகும். பௌத்தம், சமணம் ஆகியனவற்றில் காணப்படாதது. வைதீக சமயங்களில் காணப்படுகின்றது. மேலும் சுவர்க்க லோகம் என்று இஸ்லாமியர்கள் துறக்க உலகத்தைக் குறிக்கின்றனர். சீறாப்புராணத்தில் நான்கு உறுதிப் பொருட்களும் காணப்படுகின்றன.

## அறம்

மனிதர்கள் தங்களுக்குள் வரையறுத்துக் கொண்ட வாழ்க்கையை அறம் சார்ந்த என்று பொருள் கூறுவர். தீயன கருதாதிருத்தல், பிற உயிர்களை வஞ்சிக்காதிருத்தல், அன்பாயிருத்தல், பிறர் துயர் துடைத்தல் என்பன அறச் செயல்களுள் அடங்கும். “மனிதன் நலமாக வாழ்வதற்கும் நல்வாழ்வின் பயனாகிய இன்பத்தை அடைவதற்கும் அவன் கடைபிடித்தொழுக வேண்டிய நல்ல பழக்க வழக்கங்களையும் தீயவை என்று கடிந்து ஒதுக்க வேண்டிய செயல்முறைகளையும் அறிந்து நல்லனவற்றை மட்டும் பின்பற்றி ஒழுகுவதே அறமெனப் போற்றப்பட்டது புலானகும்”2 என்று மனித வாழ்வில் அறத்தின் பாத்திரம் குறித்துக் கூறுகிறார் ச.முத்துலெட்சுமி. பிறர்க்கு நலம் பயக்கும் செயல்களே அறம் எனப்படுகிறது. அறம் சார்ந்தே தம் கொள்கையையும் வாழ்நிலைகளையும் கட்டமைத்திருப்பது இஸ்லாம் சமயமாகும். இறைவசனங்களைக் கடைபிடித்து ஒழுங்கினைக் கடைபிடிக்கின்றனர் தொழுகை அதில் ஒன்றாகும். தொழுகையின் மூலம் தம் வாழ்வை மேன்மைப்படுத்திக் கொள்கின்றனர். வியாபாரத்தின் பொருட்டு சென்ற குழுக்களில் முகம்மது நபி அவர்களைப் பல்வேறு இடர்களிலிருந்து காப்பாற்றுகிறார். அது போல அபூபக்கரை பாம்பு தீண்ட அவரை விசத்திலிருந்து காப்பாற்றுகிறார் முகம்மது நபி (சீறா.2623) ஊரையே பதற்றத்துக்குள்ளாக்கிய ஒட்டகத்தை அமைதிப்படுத்தி ஊரார்க்கு நன்மை செய்கிறார். நபிகள் பொய் கூறக்கூடாது, பிறர் சொத்துக்கு ஆசைப்படக் கூடாது, தீங்கான செயல்களைச் செய்யக் கூடாது என்பது முகம்மது நபியால் கூறப்படுகின்ற செய்திகளாகும். அவை சீறாப்புராணத்தில் எடுத்துக்காட்டப்படுகின்றன. ஓநாய் பேசிய படலத்தில் ஓநாயானது மானை விரட்டிக்

கொண்டு வருகிறது. மானானது ஹறம் ஷர்புக்குள் சென்று விட்டது. விரட்டிக் கொண்டு வந்த ஓநாய் அது ஹறம் என்றும் அல்லாகு சுபுகானகு வித்த ஆலாவின் மலாயிக்கத்து மார்கள் செய்த வரிசையினால் ஹறம் என்ற பகுதியாகும். இங்கு கொலைக் குற்றத்தை செய்யக் கூடாது என்று திரும்பியது. கொலை செய்வதற்கும் ஓர் அறத்தைப் பின்பற்றிய ஓநாய் பிறருக்கு அறத்தைப் போதிக்கிறது. அங்கு அபுஜகில், அபுசுபிய்யான் ஆகியோர் இருக்க அவர்களுக்கு,

"முகமது நபியுரை மறுத்த மாற்றலர்
முகமதி நோக்குதன் முழுதுந் தின்மையென்
றிகலுறக் கொடுமொழி யெடுத்துக் காட்டிவிண்
புகுமலைக் கானினிற் சுணங்கன் புக்கதால்" (சீறா.2982)

என்னும் பாடலில் நபிகளின் வார்த்தைகளை மறுதலித்தவர்களது நிலையானது முழுமையான சந்திரனை முற்றிலும் பார்ப்பது கேடென்று சொல்லி அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்து ஆகாயத்தைத் தொட்டு நிற்கும் மலைகளினூடே சென்று மறைந்தது. நபியின் கருத்துக்களை ஏற்று நடந்து கொள்ள வேண்டும் அவரை எதிர்ததால் தீமை பயக்குமென்று கூறிச் சென்றது. மானொன்று வேடனின் வலையில் அகப்பட்டுக் கொண்டது. மான் தனது குட்டிகளுக்குப் பால் கொடுத்து வர வேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படுத்திய போது மானிற்குப் பதிலாக தான் நின்று கொண்டு மானை அனுப்பினார். மானும் சொன்னதுபடியே செய்தது. தான் கொடுத்த வாக்கினைக் காப்பாற்றும் அறத்தைப் பின்பற்றியது மான் என்று இதில் குறிப்பிடப்படுகிறது. நபிகள் செல்லும் வழியில் வலையில் அகப்பட்டுக் கொண்ட மானை பார்த்தார்.

"வறபினி லறவபி வேட னடவியிற் றொடர்ந்தோர் மானைக்
கறுவொடும் வலையில் சேர்த்திக் கட்டிவைத் திருப்பக் கண்டார்." (சீறா.2057)

என்ற பாடலடிகள் வேடன் தன் உணவிற்காக விலங்குகளை வலை வைத்துப் பிடிப்பது வழக்கம். அவ்வாறு வலையில் மான் அகப்பட்டிருப்பதைப் பார்த்தார். அந்த மான் தான் கருவுற்றதே அல்லாகு சுகுகானகுவத்த ஆலாவின் கருணையினால்தான் என்று கூறியது. மேலும் தானும் கன்றும் விளையாடிக் கொண்டிருந்த போது இந்த வேடனின் வலையில் சிக்கிக் கொண்டதாகக் கூறிற்று. தன் குட்டிக்கு இரை தர வேண்டும். அது என்னைக் காணாமல் நிறைந்த பசியினால் மெலிந்து திரிந்ததோ (சீறா.2088) என்று கூறியது. எனவே தாங்கள் எனக்காப் பிணை நின்று என்னை விடுவிக்க வேண்டும் என்று கேட்டது (சீறா.2089) அவ்வாறு விடுத்தால் நான் துணையைச் சேர்ந்து குட்டிக்கு பால் சொரிந்து விரைவில் வந்து விடுவேனென கூறியது (சீறா.2090). "தான் வருமளவு மியானே பிணையெனச் சாற்றி நின்றார்" (சீறா.2091) என்று மானுக்குப்பிணாயக நின்றார். பின்பு மானும் சென்று திரும்பி பிணையை மீட்டுக் கொள்ளுங்கள் என்று கூறியது "மன்னிய பிணையை மீட்டு மெனுமுரை வழங்கிற்றன்றே" (சீறா.2115). முகம்மது நபி வேட்டுவனிடம் உனது பிணையைத் தள்ளி பசியை நீக்குக் கொள்ளுவதற்கு மானைக் கொண்டு செல்வாயாக என்று கூற வேட்டுவன்

மனந்திந்தி நபிகளின் காலடிகளில் வீழ்ந்து வணங்கினான். இனி இத்தொழில்களை விட்டொழித்து விடுவதாகக் கூறி இஸ்லாத்தில் இணைந்து கொண்டான். மானை நபிகள் மீண்டுக்கும் காட்டுக்குள் போகச் சொன்னார் "கானகஞ் சென்னீ யென்றார்" (சீறா.2121) இவ்வாறு தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றிய திறத்தில் மானும், மானுக்கு இறங்கிய வேடனும் வேடனின் பசியைப் போக்குதற்காக முகம்மது நபியும் தங்கள் அறச் செயலை நிகழ்த்தினர். இவ்வாறு காப்பியத்தில் பெரும்பான்மையும் அறச்செயல்களால் நிறைந்துள்ளன.

## பொருள்

நான்கு உறுதிப் பொருள்களுள் இரண்டாவதாக இருப்பது பொருள் ஆகும். ஒவ்வொரு மனிதருக்கும் அவரது வாழ்க்கைக்கும் பொருள் இன்றியமையாததாகும். பொருளைத் தேடிச் செல்வதை சங்க காலத்தில் பொருள்வயின் பிரிவு என்று குறித்தனர். பொருள் இல்லாதவரை இவ்வுலகம் மதிப்புடன் நடத்தாது என்றும் கூறுவர். பொருள்வயின் பிரிவு பற்றி ஈதலும் துய்த்தலும் இல்லெனச் செய்வினை கைம்மிக எண்ணுதி (குறுந்.63), வினையே ஆடவர்க்கு உயிரே (குறுந்.135), உள்ளது சிதைப்போர் உளர் எனப்படாஅர் (குறுந்.283) என்னும் அடிகள் குறிப்பிடுகின்றன "வினையை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடாக மேற்கொள்ள வேண்டிய ஆடவர்கள் உடையாளர்களாக இருந்தாலும் அந்த உடைமையைச் செலவிடாமல் அப்படியே பாதுகாத்து வைத்தற் பொருட்டும் இல்வாழ்க்கைக்குத் தேவையான பொருட்செலவிற்கும் பிhpய வேண்டியது அவர்தம் கடமை"3 என்று பொருளுக்காக ஆண்கள் பிhpந்து செல்வது இன்றியமையாதது என்று குறிப்பிடுகிறார் பெ.மாதையன். பொருளே குடும்பத்தை நடத்துவதற்கான ஆதாரமாகக் காணப்படுகிறது. சீறாப்புராணத்தில் முகம்மது நபி ஷாம் நகரத்திற்குச் சென்று வியாபாரம் செய்து பொருளீட்டும் நடவடிக்கை பெரும்பான்மையாகக் குறிப்பிடப்படுகிறது. அவரது வியாபாரத்திற்கான பயணமும் பயணத்தில் எதிர்கொள்ளும் இடர்களும் ஷாம் நகரத்தில் கொல்லப்பட இருப்பதும் சுட்டப்படுகின்றன. முகம்மதின் பெரிய தகப்பனார் அபீதாலிப்பானவர் இவரை தன்னோடு வியாபாரத்தில் ஈடுபடுத்துகிறார். கதீஜா அம்மையாரிடம் திரவியங்களைப் பெற்றுக் கொண்டு அதனை தூர தேசங்களுக்குக் கொண்டு சென்று விற்று பெரும் பொருள் ஈட்டி வருவதை நோக்கமாகக் கொண்ட வியாபாரிகளுடன் நபிகள் முகம்மதும் செல்வது காட்சிப்படுத்தப்படுகிறது. அவரது வியாபாரத் திறமையைக் கண்டே கதீஜா அம்மையார் அவரைத் திருமணம் செய்து கொள்ளவும் தயாராகிறார். கதீஜா அம்மையாரிடம் வியாபாரத்தின் பொருட்டு திரவியங்களைக் பெறுதல்,

"கலைத்தடக் கடலே யெந்தங் கண்ணிரு மணியே யாமு
மலைத்தடக் கடற்கட பாவை யணிமனை யடத்துச் செம்பொ
னிலைத்திட நினைத்து வாங்கி நெறிதெடுந் தூர மெல்லாந்
தொலைத்திவண் புகுவம் வல்ல தொழின்முடித் திடுவ மென்றே" (சீறா.616)

என்ற பாடலடிகளில் கதீஜாவென்னும் பெரும் சம்பத்துக்களையுடைய அம்மையாரிடம் வியாபாரம் செய்வதற்கான சிவந்த நிறமுடைய திரவியங்களை வாங்கி தூர தேசங்களுக்குச் சென்று விற்று பெரும் பொருளீட்டி வருவோம் என்று அபீத்தாலிப்பானவர் தம் உடன் வியாபாரிகளுடன் வந்தார். அவரோடு முகம்மதும் சென்றார். அவர் கதீஜா அம்மையாரிடம் திரவியம் பெற்றும கச்சவடத் தொழிலைத் தொடங்குவோம் என்று கூறினார்.

"தெரிதரத் தெளிந்த சிந்தைத் தேமொழி கதிசா பாலில்
விரைவினிற் சென்று செம்பொன் விளைவுறச் சிறிதுகேட்போ
மருளொடு மீய்ந்தா ரென்னி லதற்குறு தொழிலைக் காண்போம்
வரையற விலையென் றோதில் வருகுவம் வருக வென்றார்" (சீறா.645)

என்று தம் சகோதரனின் மகனான முகம்மதுவை அழைத்துச் சென்று கதீஜாவிடம் திரவியம் பெற்று கச்சவடமத் தொழிலைத் தொடங்கலாம் என்று கூறினார் அபீத்தாலிப். அவ்வாறே சென்று கதீஜாவிடம் திரவியம் கேட்டார்.

"சிறிது பொன்னென திடத்pனி லளித்திடிற் றேசிக ருடன் கூடி
யுறுதி சாமினுக் கேகியிங் கடைகுவ னுமதரு ளுளதாகில்
வறிய வர்க்கொரு மணநிறை வேறிடு மடமயி லனையாயீ
தறுதி யில்லெனி லதுவுநன் றெனஅபித் தாலிபு முரைத்தாரே" (சீறா.653)

என்ற பாடலடிகள் இதனை வெளிப்படுத்துகின்றன. அபீதாலிப்பானவர் கதீஜாவிடம் சிறிது திரவியம் தந்தால் அதைக் கொண்டு பொருளீட்டி இவன் எனது சகோதரனானாகிய அப்துல்லாவின் மகன் இவனது திருமணத்தை நடத்தலாம் என்றிருக்கிறேன் என்று கூறினார். அதற்கு கதீஜா மனமொருமித்த நிலையில், என்னிடம் உள்ள திரவியங்கள் அனைத்தும் உம்முடையதெனக் கொள்கவென்று கூறி கொடுத்தார்.

"பூத ரம்பொரு புயத்தபித் ததாலிபு புளகெழ முகநோக்கி
மாத வதத்தினென் பொருளுள தெவையுநின் மனைப்பொருள்ளெளியேனு
மாத ரத்துறு மொழிவழி நடப்பதற் கையுற லெனப்போற்றிக்
காத லித்துரைத் தார்விரைத் தார்குழற் கனிமொழிக் கதிசாவே" (சீறா.655)

என்று கூறி எனது திரவியமனைத்தும் உங்கள் வீட்டுத் திரவியம் என்று கூறினாள். அவர்கள் அவளைத் துதித்தனர். பின்பு கதீஜா அவர்களுக்கு விருந்து கொடுத்தாள். தம் பணியாளர்களிடம் திரவியங்களைக் கொண்டு வாருங்கள் என்று கூற, அவர்கள் திரவியங்களைக் கொண்டு வந்து குவித்து விட்டனர். திரவியங்களை பொதிந்து இருநூறு ஒட்டகங்களில் கட்டினர். அவற்றைக் கொண்டு ஷாம் நகர் செல்ல ஆயத்தமாயினர். ஷாம் நகர் செல்லும் வழியில் பல்வேறு இடர்களைக் கடந்தனர். ஷாம் நகரிலும் வியாபாரத்தின் பொருட்டு நபிகளை அழைத்து சென்று கல்லை யுருட்டி விட்டுக் கொல்லத்திட்டம் தீட்டியவர்களின் கைகள் கல்லோடு பொருத்திக் கொண்டன. நல்ல செல்வங்களுடன் நம்

நாடு திரும்பினர். இவ்வாறு பொருளீட்டும் பாங்கு சீறாப்புராணத்தில் விரித்துரைக்கப்படுகிறது. வியாபாரமே பெரும்பாலான இஸ்லாமியவர்களின் பொருளீட்டும் வழியாகக்காணப்படுகிறது. நறுமணங்களையும், இரத்தின வர்க்கங்களையும், திரவியங்களையும், துணி போன்றவற்றையும் விற்பனை செய்வதைக் காணமுடிகிறது.

## இன்பம்

நான்கு உறுதிப் பொருள்களில் மூன்றாவதாக கூறப்படுவது இன்பம் ஆகும். காட்சியின்பம், புலனின்பம், காமத்தின்பம் என்று பல வகைப்படும் இன்ப நுகர்ச்சியை அனைத்து உயிர்களும் கொண்டுள்ளன. காட்சியின்பம் இயற்கையினைக் கண்டு கொள்ளும் இன்பமாகும். புலனின்பம், உணர்தல், தொடுதல், முகர்தல், இசை கேட்டல் என்பனவாகக் காணப்படும். காமத்தின்பம் ஆண், பெண் இருவரும் கலவியில் கூடும் போது உணரும் இன்பம் ஆகும். காமத்தின்பமே காப்பியங்களிற் கூறப்படும் இன்ப நுகர்ச்சியாகும். கற்பு புணர்ச்சியிலும், களவுப் புணர்ச்சியிலும் திளைத்திருத்தல் என்பதாக இதனைக் கூறலாம். “தலைவனைக் கூடுங்கால் அடைகின்ற இன்பம் கடல் போன்றது. தலைவனைப் பிரியுங்கால் அடைகின்ற துன்பமோ அக்கடலை விடப் பெரியது. இன்பத்திலும் துன்பம் மிகுதியாகிறது”4 என்று இன்பச் சுவை ஆண், பெண் இருவரிடம் கொண்டிருக்கும் பாங்கை வெளிப்படுத்துகிறார் சி.இலக்குவனார். காம இன்பத்தில் இருவரும் இணைபிரியாதிருக்க விரும்புகின்றனர். இவ்வாறான இன்பத் துய்ப்பினை சீறாப்புராணத்தின் முகம்மது நபிக்கும் கதீஜா அம்மையாருக்கும் நடைபெறும் திருமணத்தின் போது காணமுடிகிறது.

“மணிமொழித் ததிருந் திரைக்கட லனைய
மனமகிழ் வொடுமுகம் மதுவும்
பணிபட ரவனித் திலதநா யகியும்
பன்மலர்ப் பளிக்கறை புகுந்து
கணிபடா வழகு கண்களிற் பருகிக்
கருத்தென வுயிருமொன் றாகி
யணிகிள ரின்பப் பெருக்கெடுத் தெறியு
மாநந்தக் கடற்குளித் தனரே” (சீறா.1212)

என்ற பாடல் திருமணத்தின் பின் பள்ளியறையுள் புகுந்த இருவரும் ஒருவர் அழகை ஒருவர் கண்களாற் பருகி இன்புற்றனர். இருவரின் கருத்தும் உயிருமொன்றாய் கலந்தனர். அழகின் இன்பப் பெருக்கை அள்ளி வீசி ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கினார்கள். அது போல முகம்மது நபியின் மகளான ஜன்னத் பீவியும் அலியிபுனு அபீத்தாலிபு றலியல்லாகு அன்கும் திருமணம் முடிந்த பின் அனைவரும் சென்று விட வீட்டின் தங்கி இன்பம் பொருந்திய வாழ்க்கையை வாழ்ந்தனர் என்று குறிப்பிடுகிறார் உமறுப்புலவர். சிலப்பதிகாரத்தில் கூறியது போல அல்லது கம்பராயமாணத்தில் கூறியது போல காம இன்பத்தை நுகர்தலை வெளிப்படையாகக் கூறவில்லை. மாறாக இலைமறைகாயாய் வெளிப்படுத்துகிறார்.

“சொல்லுடன் பொருளெனச் சுருதி நூன்முறை
யில்லுறைந் தொருவருக் கொருவ ரின்பமுற்
றல்லெனுங் கூந்தலு மரசர் சீயமு
மல்லலம் புவியிடை மகிழ்வின் வைகினார்” (சீறா.3260)

என்று சொல்லும் பொருளும் போல ஜன்னத் பீவி பாத்திமாவும் அபித்தாலிப் றலியல்லாகு அன்கு அவர்களும் இணைந்து வேதநூல் கூறிய வாறு தங்கள் வீட்டின் கண் இன்பத்தைப் பொருந்தி வளமையான வாழ்வு வாழ்ந்தனர் என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு காப்பியத்தில் இன்பச் சுவை காட்சியின்பமாகவும் ஒருவருக்கொருவர் அழகை கண்களால் கண்டின்புறுதல் இல்லறவாழ்வில் இணைந்து இன்ப வாழ்வு வாழ்தல் மூலமாகவும் காட்சிப்படுத்தப்படுகிறது.

## வீடுபேறு

புருஷார்த்தங்களில் நான்காவதாகக் கூறப்படுவது மேலுலக வாழ்க்கை அல்லது மோட்சம் ஆகும். பிறப்புத் துன்பம் என்று கூறும் வைதீக நெறிகளிலிருந்து வேறுபட்டு இக வாழ்வையும் மறுமை வாழ்வையும் ஒருசேர நோக்கும் பண்பு இஸ்லாத்தில் காணப்படுகிறது. இந்தியத் தத்துவங்கள் அல்லது சமயங்களில் மோட்சம் என்பது பிறப்பிலிருந்து விடுதலை பெறுதல் என்று கூறப்படுகிறது. அது சுவர்க்கலோகம் அல்லது வைகுண்ட பதவி அடையதல் என்பதாகக் கருதப்படுகிறது. வாழ்வில் அறங்களைக் கடைபிடித்து தீங்கு செய்யாதிருப்போர்க்கு வாய்ப்பதாக மோட்சம் கருதப்படுகிறது. இந்திரியங்களிலிருந்து விடுபடுதல் மோட்சம் என சைவ சித்தாந்தம் குறிப்பிடுகிறது. “வீடு பேற்றினை (மோட்சத்தை) இறுதிப் பயனாகக் கொள்வதும் அதனை அடைவதற்குத் துறவு மனப்பான்மை கொண்ட பயிற்சியை மேற்கொள்வதும் இந்தியத் தத்துவச் சிந்தனையனைத்திற்கும் பொதுவான இரு பகுதிகளாகும்”5 இந்தியத் தத்துவத்தில் துறவை மேற்கொள்வது, சரியை, கிரியை, ஞானம், யோகம் என்னும் நான்கு வழிகளைப் பின்பற்றுவது என்பனவெல்லாம் இஸ்லாத்தில் புறுக்கானூல் வேதத்தை கடைபிடிப்பவர்கள் அதாவது இஸ்லாம் மார்க்கத்தை கடைபிடிப்பவர்கள் சுவர்க்கலோகம் அடைவர் என்பதை ஒத்ததாகும். தொழுகையினால் பாவந்தொலைந்து சுவர்க்கம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இதில் காணப்படுகிறது. வீடுபேறு என்பது இக்காப்பியத்தில் சுவர்க்கம் எனப்படுகிறது. தீயோர்க்கு நரகம் கிடைக்கும் என்றும் அது மோட்சம் கிடையாது என்றும் துன்பம் என்றும் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. இஸ்லாம் வேத்தை கடைபிடிப்பவர்களில் மனந்திருந்தியவர்களும் இருக்கின்றனர். காபிர்கள், சத்துராதிகள் எனப்பட்டவர்களுக்கு நரகமே விடிவு என்று கூறப்படுகிறது. நபி முகம்மதிற்கு ஆறு வயதும் ஒரு மாதமும் பூர்த்தியான போது அவரது தாயான ஆமினா இவ்வுலகை விட்டு சுவர்க்கலோகம் சென்றார் என்று குறிப்பிடப்படுகிறது.

“அரசர்நா யகநபிக் காண்டோ ராறுட
னொருதிருத் திங்களு நிறைந்த தோதிய
வரிதினிற் கணக்கிலக் காக வாண்டுமோ

ரிருபஃ தாமினா விறந்த காலமே” (சீறா.518)

என்று இறத்தலை நிரியாணமாயினார்கள் என்று குறிப்பிடுகின்றனர். ஆறுவயதும் ஒரு மாதமும் இருக்கின்ற போது இறந்தார் எனக் குறிப்பிடுகிறது. அவர் இறந்ததும் நபிகள் பூமியில் விழுந்து புழுவைப் போலத் துடித்து அழுதார்கள் (சீறா.519) என்று கூறப்படுகிறது. அது போல அவரது பாட்டனார் முத்தாலிப்பும் நிரியாணமானதையும் விவரிக்கின்றனர்.

“நபிதிரு வயதிரு நான்குந் திங்களுங்
கவினுற விரண்டு சென் றதற்பின் காணுநாட்
புவியினிற் பத்துறப் பொருந்தும் போதினி
லபுதுல்முத் தலிபுமே லுலக டைந்தனர்” (சீறா.534)

என்று கூறப்படுகிறது. நபிகளுக்கு எட்டு வயதாகும் போது அப்துல் முத்தாலிப் அவர்கள் இவ்வுலகை விட்டு விண்ணுலகம் சென்றார்கள் என்று குறிப்பிடப்படுகின்றது. .கதீஜா, அபீத்தாலிப் ஆகியோரும் நிரியாணமானதும் சுவர்க்கலோகம் அடைந்ததும் காப்பியத்தில் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு வீடுபேறு அல்லது மோட்சம் என்பது இஸ்லாத்தில் குறிப்பிடப்படுகிறது. நபிகள் நாயகத்தின் இறப்பிற்கு ஆறு வருடங்களுக்கு முன்பே காப்பியம் முற்று பெறுகிறது. அவரது மோட்சம் பற்றிய இக்காப்பியம் கூறவில்லை. அதனை சின்ன சீறா என்னும் காப்பியமே கூறுகிறது.

## முடிவுரை

பெரியபுராணம், கம்பராமாயணம் ஆகியனவும் காப்பியக் கூறுகளைக் கொண்டிருக்கின்றன. கம்பராமாயணத்தினையும் தமிழ் இலக்கியங்களையும் பக்தி இலக்கியங்களையும் நன்கு கற்றவரான உமறுப்புலவர் தமிழ்க் காப்பிய மரபுகளை முறையாகக் கடைபிடித்து எழுதியுள்ளார் என்பதைக் காணமுடிகிறது. புருஷார்த்தங்களையும், திருமணம், எண்சுவை போன்ற காப்பியக் கூறுகளைப் பெற்றுள்ளன. தன்னிரகற்றத் தலைவனான நபிகள் நாயகத்தின் ஆற்றல்கள், அறம், பொருள், இன்பம், வீடு என்பனவும் முறையாக அமைக்கப் பெற்றுள்ளன. எனவே காப்பியக் கூறுகளின் அடிப்படையில் சீறாப்புராணம் பெருங்காப்பியம் எனக் குறிப்பிடலாம்.

## பார்வை நூல்கள்

[1] ராஜ்கௌதமன், தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், ப.29
[2] ச.முத்துலட்சுமி, அற இயலும் பண்பாடும், ப.5
[3] பெ.மாதையன், அகத்திணைக் கோட்பாடும், சங்க அகக் கவிதையும், ப.162
[4] சி.இலக்குவனார், வள்ளுவர் கண்ட இல்லறம், ப.88
[5] ஹரியண்ணா, இந்தியத் தத்துவம், ப.14

## References

[1] Rajgowthaman, Ethics and Power in the Tamil Community, p.29
[2] C. Muthulakshmi, Ethics and Culture, p.5
[3] B. Mathian, Theory of Internal Theory and Sangha
[4] C. Ilakkuvanar, Valluvar Kantara Home, p.88
[5] Harianna, Indian Philosophy, p.14

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License